# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள்
## (திருத்தம்)

***1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*கடற்றொழில் அமைச்சர் அவர்களால் 2023, யூலை மாதம் 05 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, பெப்புருவரி மாதம் 28 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***183 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *24.00***  **தபாற் செலவு : ரூபா *150.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *சட்டப்பயன் பற்றிய கூற்று*

***வாசகம் 2 :*** *இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14ஊ என்னும் பிரிவை மாற்றீடு செய்கின்றதுடன் மாற்றீடு செய்யப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது இச்சட்டத்தின் பாகம் II இன்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவர், வள்ளத்தின் சொந்தக்காரர், வள்ளத்தின் கப்பற்தலைவர், கப்பற்றொகுதியின் எவரேனும் உறுப்பினர் மற்றும் இயைபான நேரத்தில் அத்தகைய வள்ளத்திலுள்ள எவரேனும் ஆளை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 14ஊ என்னும் பிரிவின்கீழ் புரியப்பட்ட தவறுக்குப் பொறுப்பான ஆட்களாக மேலும் ஆக்குவதற்குமாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 14ச மற்றும் 14ஞ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துப்படுகின்றதுடன்:-*

*(1) 14ச என்னும் பிரிவின் சட்டப்பயனானது–*

*(அ) இலங்கை நீர்ப்பரப்புகளில் அல்லது ஆழ்கடலில் ஏதேனும் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுவதிலிருந்து எவரேனும் ஆளை தடைசெய்வதற்குமாகும்; அத்துடன்*

*(ஆ) வள்ளத்தின் சொந்தக்காரர், உரிமத்தை வைத்திருப்பவர், வள்ளத்தின் கப்பற் தலைவர், கப்பற்றொகுதியின் எவரேனும் உறுப்பினர் மற்றும் இயைபான நேரத்தில் அத்தகைய வள்ளத்திலுள்ள எவரேனும் ஆளை புதிதாக உட்புகுத்தப் பட்ட 14ச என்னும் பிரிவின்கீழ் புரியப்பட்ட ஏதேனும் தவறுக்குப் பொறுப்பான ஆட்களாக ஆக்குவதற்குமாகும்.*

*(2) 14ஞ என்னும் பிரிவின் சட்டப்பயனானது, வேறோர் அரசின் நியாயாதிக்கத்தினுள்ளான நீர்ப்பரப்புகளில் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஆட்கள் தொடர்பில், ஏதேனும் உள்ளூர் மீன்பிடி வள்ளத்தின் பதிவு மற்றும் மீன்பிடித்தொழிற்பாடுகளுக்கான உரிமத்தை இல்லாதாக்கு வதற்கு ஏற்பாடு செய்வதற்குமாகும்.*

***வாசகம் 4 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 16அ என்னும் பிரிவை மாற்றீடு செய்கின்றது.*

***வாசகம் 5 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது இச்சட்டத்தின் 49(4) ஆம் பிரிவின்கீழ் புரியப்பட்ட தவறொன்று தொடர்பில் மீன்பிடி வள்ளத்தின் நீளத்தை அடிப்படையாகக் கொண்டு விதிக்கப்பட்ட குற்றப்பணத்தை அதிகரிப்பதற்குமாகும் அத்துடன் 49(4அ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆள் தொடர்பில் 49(4) ஆம் பிரிவின் ஏற்புடைமையைத் தவிர்த்து தனிவேறான குற்றப்பணமொன்றை விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்குமாகும்.*

***வாசகம் 6 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 49அ மற்றும் 49இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது (முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி தவிர்ந்த) முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ச என்னும் பிரிவை அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற ஆளொருவர் தொடர்பில் இச்சட்டத்தில் தண்டமெதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படாவிடின் தண்டமொன்றை விதிப் பதற்கு ஏற்பாடு செய்வதற்குமாகும்.*

**வாசகம் 7** : இவ்வாசகம், *முதன்மைச் சட்டவாக்கத்தின்* 66 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன்:-

(அ) "அதிகாரம் பெற்ற அலுவலர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், கரையோரக் காவல் திணைக்களத்தின் எவரேனும் கரையோரக் காவல் அலுவலரை உள்ளடக்குவதற்குமாகும்.

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தில், "சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்கு படுத்தப்படாத (சஅஒ) மீன்பிடித் தொழிற்பாடுகள்" மற்றும் "கப்பற் தலைவர்" என்னும் சொல்லமைப்புக்களுக்கு புதிய வரைவிலக்கணங்களை உள்ளடக்குவதற்குமாகும்.

# கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்)

ச.வ.ஓ - 1/2021

## 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 14ஊ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்*

**2**. ((இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14ஊ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:-

"வெளிநாட்டு நீர்ப்பரப்புகளில் மீன் பிடிப்பதனை தடைசெய்தல்

14ஊ. (1) ஆளொருவர், வேறோர் அரசின் தேசிய நியாயாதிக்கத்தினுள்ளான நீர்ப்பரப்புகளில் மீன்பிடித் தொழிற்பாடுகளுக்காக, இப்பாகத்தின் கீழ் எந்த உள்ளூர் மீன்பிடி வள்ளமொன்றுக்கு உரிமமொன்று அளிக்கப்படுகின்றதோ அந்த உள்ளூர் மீன்பிடி வள்ளமொன்றை, அவ்வரசின் சட்டங்களுக்கிணங்க அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, பயன்படுத்துதலோ அல்லது பயன்படுத்தச் செய்வித்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ஆளொருவர் என்பது, அவ்வள்ளத்தின் சொந்தக்காரர், அத்த

கைய வள்ளம் தொடர்பில் வழங்கப்பட்ட உரிமத்தை வைத்திருப்பவர், அவ்வள்ளத்தின் கப்பற் தலைவர், கப்பற்றொகுதியின் எவரேனும் உறுப்பினர் மற்றும் அத்தகைய தவறு புரியப்படும் நேரத்தில் அத்தகைய வள்ளத்திலுள்ள எவரேனும் ஆளை உள்ளடக்குதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய வள்ளத்திலுள்ள எவரேனும் ஆள், அத்தகைய தவறானது அத்தகைய ஆளை அறியாமல் புரியப் பட்டது அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கான எல்லா உரிய விழிப்புக்கவனங் களையும் பிரயோகித்தார் என எண்பித்தால், அத்தகைய ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது."

முதன்மைச் சட்டவாக்கத்தின் IIஆ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்

**3**. பின்வரும் புதிய பாகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IIஅ இனை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் IIஆ என்னும் பாகமாக பயனுறுதலும் வேண்டும்:-

"பாகம் IIஆ

இலங்கை நீர்ப்பரப்புகளில் அல்லது ஆழ்கடலில் சட்ட விரோதமான, அறிக்கை யிடப்படாத அல்லது ஒழுங்கு படுத்தப்படாத மீன்பிடித்தலைத் தடைசெய்தல்

14ச. (1) ஆளொருவர், இலங்கை நீர்ப்பரப்பு களில் அல்லது ஆழ்கடலில் எவையேனும் சட்ட விரோதமான, அறிக்கையிடப்படாத அல்லது ஒழுங்கு படுத்தப்படாத மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ஆளொருவர் என்பது, அவ்வள்ளத்தின் சொந்தக்காரர், அத்த கைய வள்ளம் தொடர்பில் வழங்கப்பட்ட உரிமத்தை வைத்திருப்பவர், அவ்வள்ளத்தின் கப்பற் தலைவர்,

கப்பற்றொகுதியின் எவரேனும் உறுப்பினர் மற்றும் அத்தகைய தவறு புரியப்படும் நேரத்தில் அத்தகைய வள்ளத்திலுள்ள எவரேனும் ஆளை உள்ளடக்குதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய வள்ளத்திலுள்ள எவரேனும் ஆள், அத்தகைய தவறானது அத்தகைய ஆளை அறியாமல் புரியப் பட்டது அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கான எல்லா உரிய விழிப்புக்கவனங் களையும் பிரயோகித்தார் என எண்பித்தால், அத்தகைய ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

*மீன்பிடி வள்ளங்களின் பதிவு மற்றும் மீன்பிடித் தொழிற் பாடுகளுக்கான உரிமத்தை இல்லா தாக்குதல் முதலியன*

14ஞ. பணிப்பாளர் தலைமையதிபதி, எவரேனும் ஆள் வேறோர் அரசின் நியாயாதிக்கத்தினுள்ளான நீர்ப்பரப்புகளில் எவையேனும் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத அல்லது ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகின்றார் என நம்புவதற்கான நியாயமான ஏதுக்களை அவர் கொண்டிருக்கின்றவிடத்தும் அத்தகைய தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட மீன்பிடி வள்ளமானது, 15 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட உள்ளூர் மீன்பிடி வள்ளமொன்றாகவிருக்கின்றவிடத்தும், அவர், விடயத்துக்கேற்ப அத்தகைய ஆளுக்கு அல்லது அத்தகைய வள்ளத்தின் சொந்தக்காரருக்கு கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை அளித்ததன் பின்னர்–

(அ) 15 ஆம் பிரிவின்கீழ் உள்ளூர் மீன்பிடி வள்ளமொன்றாகவுள்ள அத்தகைய வள்ளத்தின் பதிவை, அவரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு இல்லாதாக்கலாம் அல்லது இடைநிறுத்தலாம்; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்ப இலங்கை நீர்ப்பரப்புகளில் அல்லது ஆழ்கடலில் எவையேனும் விதித்துரைக்கப்பட்ட மீன்பிடித்தொழிற்பாடுகளில் ஈடுபடுவதற்கு உரிமமளிக்கப்பட்டவருக்கு அதிகாரமளிக்கும், விடயத்துக்கேற்ப 6 ஆம் பிரிவின் அல்லது 14அ என்னும் பிரிவின்கீழ் அம்மீன்பிடி வள்ளம் தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தை, அவரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு இல்லாதாக்கலாம் அல்லது இடைநிறுத்தலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16அ என்னும் பிரிவை நீக்குதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன்" என்பதிலிருந்து அப்பிரிவின் இறுதி வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இதற்கான அட்டவணையின் நிரல் I இல் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட மீன்பிடி வள்ளத்தின் நீளத்தை கவனத்திற்கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டிய அச்சொல்லப்பட்ட அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட தொகைகளுக்குக் குறையாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்:-

### அட்டவணை

| நிரல் I | நிரல் II |
|---|---|
| வள்ளமொன்றின் நீளம் | குற்றப்பணங்கள் |
| 10.3 இலிருந்து 15 மீற்றர்களை விட குறைவானது | ரூபா 50,000 |
| 15 இலிருந்து 24 மீற்றர்களை விட குறைவானது | ரூபா 100,000 |
| 24 இலிருந்து 45 மீற்றர்களை விட குறைவானது | ரூபா 500,000 |
| 45 இலிருந்து 75 மீற்றர்கள் | ரூபா 1 மில்லியன் |
| 75 மீற்றர்களை விட மேலானது | ரூபா 5 மில்லியன்". |

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(4அ). நான்காம் உட்பிரிவில் அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப்பினும் மீன்பிடி வள்ளமொன்றுடன் சம்பந்தப்படாத மீன்பிடிப் பிணக்கொன்றுக்கான திறத்தவரொருவராக உள்ளவரும் 44 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு முன்னர் தோன்றுமாறு கட்டளை விட்டழைக்கப்படும்போது அவ்வாறு தோன்றுவதற்கு தவறுகின்றவரும் அல்லது 44 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் பதியப்பட்ட, மீன்பிடி வள்ளமொன்றுடன் சம்பந்தப்படாத தீர்வொன்றுக்கு திறத்தவரொருவராக வுள்ளவரும் அத்தகைய தீர்வின் நியதிகளுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்றவருமான எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.".

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப் படுவதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 49ஆ மற்றும் 49இ என்னும் பிரிவுகளாக பயனுறுதலும் வேண்டும்:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 49ஆ மற்றும் 49இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்*

*“இலங்கை நீர்ப்பரப்புகளில் அல்லது ஆழ்கடலில் சட்ட விரோதமான, அறிக்கை யிடப்படாத அல்லது ஒழுங்கு படுத்தப்படாத மீன்பிடித்த லுக்கான தண்டம்*

49ஆ. இச்சட்டத்தின் 14ச என்னும் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தில் அத்த கைய தவறுக்கு தண்டமெதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படாவிடின் நீதிவானொருவரி னாலான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன் மீது ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*தண்டமெதுவும் வெளிப் படையாக ஏற்பாடு செய்யப்படாத தவறுகளுக்கான தண்டம்*

49இ. பிரிவு 49ஆ இன் ஏற்பாடுகளுக்கமைய, (இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி தவிர்ந்த) இச்சட்டத்தின் எந்த ஏற்பாடு தொடர்பில் தண்டமெதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படவில்லையோ அந்த ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற அல்லது அதனுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மீது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.”.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்*

*(1)* “அதிகாரம்பெற்ற அலுவலர்” என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், “சார்ஜன்ட் தரத்திற்குக் குறையாத எவரேனும் இராணுவ, விமானப்படை அல்லது பொலிசு அலுவலரையும் சிறு உத்தியோகத்தர் தரத்திற்குக் குறையாத எவரேனும் கடற்படை அலுவலரையும் உள்ளடக்குகிறது;” என்னும் சொற்களுக்குப் பதிலாக “சார்ஜன்ட் தரத்திற்குக் குறையாத எவரேனும் இராணுவ, விமானப்படை, அல்லது பொலிசு அலுவலரை, சிறு உத்தியோகத்தர் ஒருவரின் தரத்திற்குக் குறையாத எவரேனும் கடற்படை அலுவலரை அல்லது 2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கரையோரக் காவல் திணைக்களச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கரையோரக் காவல் திணைக்களத்தின் எவரேனும் கரையோரக் காவல் அலுவலரையும் உள்ளடக்குகின்றது;” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

*(2)* “ஆழ்கடல்” என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

“சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத (சஅஒ) மீன்பிடித் தொழிற்பாடுகள்” என்பது, இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவின் தீர்மானங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு, 2009 ஆம் ஆண்டின் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப் படாத மீன்பிடித்தலைத் தடுப்பதற்கும், தடைசெய்வதற்கும், ஒழிப்பதற்குமான துறைமுக அரச வழிமுறைகள் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் கமத்தொழில் ஒழுங்கமைப்பு (உகஒ) உடன்படிக்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்

தலைத் தடுப்பதற்கும், தடைசெய்வதற்கும், ஒழிப்பதற்குமான (சஅஒ மீன்பிடி நடவடிக்கைத்திட்டம்) சர்வதேச நடவடிக்கைத் திட்டத்தின் 3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள மீன்பிடித்தொழிற்பாடுகள், இலங்கை திறத்தவரொருவராகவுள்ள வேறு இயைபான பிராந்திய கடற்றொழில் முகாமை ஒழுங்கமைப் புகளினால் (பிகமுஒ) ஏற்றுக்கொள்ளப்பட்ட முகாமை மற்றும் பேணிக்காத்தல் வழிமுறை களை மீறி நடாத்தப்படும் மீன்பிடித்தொழிற் பாடுகள் மற்றும் ஏற்புடையற்பாலனவான சர்வதேச சட்டங்களின் இயைபான ஏற்பாடு களின்கீழ் உயிருள்ள கடல்சார் வளங்களைப் பேணிக்காத்தலை நோக்கிய இலங்கையின் கடப்பாடுகளை மீறி நடாத்தப்படுகின்ற மீன்பிடித் தொழிற்பாடுகளை உள்ளடக்கு கின்றது;

(3) ''அமர்வியற் பாங்குடை இனங்கள்'' என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"கப்பற் தலைவர்" என்பது, மீன்பிடிக் கலனொன்றின் ஏவுகையைக் கொண்டுள்ளவரும் மார்க்கம் பற்றிய அறிவுறுத்தல்களை வழங்குகின்றவரும் பிடிக்கப்பட்ட மீனை மதிப்பீடு செய்து பதிகின்றவரும் கப்பலிலுள்ள கப்பற்றொகுதி யினரை முகாமை செய்பவருமான ஆள் எனப் பொருள்படும். கப்பலிலுள்ள தலைவர் அல்லது கபிதான் கப்பற் தலைவர் ஒருவரின் தன்மையில் சேவைசெய்பவராக கருதவும் படுகின்றார்.

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*